ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
திகதி 2021.01.05

# இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமையினைப் பேணுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தல்

நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமையினைப் பேணும் நோக்குடனும் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியமான எதிர்மறையான தாக்கங்களைப் பரிசீலனையில் கொண்டும், இலங்கை மத்திய வங்கியினது நாணயச் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் கௌரவ நிதி அமைச்சர், 2020 யூலை 02ஆம் திகதியிடப்பட்ட 2182/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் செல்லுபடியாகும் காலத்தினை 2021 சனவரி 02 இலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து 18.12.2020ஆம் திகதியிடப்பட்ட 2206/25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் கட்டளையொன்றினை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய, மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான பின்வரும் கட்டுப்பாடுகள் 2021 யூலை 01ஆம் திகதி வரை செயற்பாட்டிலிருக்கும்.

1. பின்வருவன நீங்கலாக, இலங்கையில் வதியும் ஆளொருவரினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காகச் செய்யும் வெளிமுகப் பணவனுப்பல்களுக்காக வழங்கப்பட்ட பொதுவான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது.

   அ. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்படவுள்ள முதலீடுகள்,

   ஆ. முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகத்தில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முதலீடுகள் தொடர்பில் முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்படவுள்ள மேலதிக முதலீடொன்று,

   இ. முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வெளிநாட்டில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள துணை நிறுவனங்கள் அல்லது கிளை அலுவலகங்களிலுள்ள தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் செய்யப்படவுள்ள நிதிகளின் மேலதிக முதலீடுகள்/ உள்ளீடுகளுக்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான தொகை,

   ஈ. வெளிநாடுகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொடர்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, செயற்றிட்டம், பிரதிநிதித்துவம் அல்லது அதையொத்த ஏதேனும் அலுவலகங்களைப் பேணும் நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான பணவனுப்பல்.

2. எந்தவொரு தொகை வரையிலுமான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் மீதான பணவனுப்பல்கள் அல்லது உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல் தவிர, இலங்கையில் வதியும் ஆட்களினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துதல்.

3. முதற்தடவையாக புலம்பெயர் கொடுப்பனவினைக் கோருகின்ற புலம்பெயர்பவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000இற்கு மட்டுப்படுத்தல்.

4. ஏற்கனவே, புலம்பெயர் கொடுப்பனவினைப் பெற்றிருந்த புலம்பெயர்ந்தவரினால் கோரப்பட்ட புலம்பெயர் கொடுப்பனவின் கீழான நிதிய அனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000இற்கு மட்டுப்படுத்துதல்.

5. மேலேயுள்ள 1அ மற்றும் 1ஆ இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களை பூர்த்தி செய்தவர்களுக்கு மாத்திரம் பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சிய முதலீடுகளுக்கான விசேட அனுமதிகளை விடயத்திற்கு விடயம் என்ற ஒழுங்கில் வழங்குவது மீதான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரத்தினை மட்டுப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் அடையாளம் காணப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மாத்திரமே ஏற்புடைத்தாக இருக்குமென்பதுடன் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கலின் மீது எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்காது.

மேலதிகத் தகவல்களை www.dfe.lk என்ற வலைத்தளத்தினுள் நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.